# 9. இயேசுவிடமிருந்து பெலன் பெற்றுச் செயல்படுவோம்

ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றுவோர் தடைகளை எதிர்நோக்கும்போது, தளர்ந்துபோகாது அவரிடமிருந்து பெலன்பெற்று செயல்படலாம் என்பதைப் பற்றி இங்கு கவனிப்போம்.

பாலைநிலப் பிரயாணத்தின்போது, மோசேயின் தலைமைத்துவத்தின் கீழ், கடவுள் நீரைப்பிரித்து மக்களை முன்கொண்டுசென்றார். பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர், இஸ்ரயேலரின் மெசியாவாக இயேசு வந்தார். தமது சீடர்கள் படகில் புயல் காற்றினால் அடித்துச் செல்லப்படும்போது, அவர் நீர்மேல் நடந்து, அவர்களிருந்த படகில் ஏறி, அவர்களைப் பெலப்படுத்துகிறார். இந்நிகழ்வு கலிலேயாக் கடலில் இடம்பெற்றது.

**வாசிப்போம்**
**மாற்கு 6:45- 52**

இயேசு ஐயாயிரம் மக்களுக்கு அற்புதமாக தமது திருத்தூதர்களின் முன்னிலையில் உணவு வழங்குகிறார். அதனைத் தொடர்ந்து அவர் தனியாக செபிப்பதற்காக மலைக்குச் செல்ல விரும்புகிறார்.

தமது சீடர்களை அங்கிருந்து படகொன்றில் ஏறி, அக்கரையில் பெத்சாய்தா நகர் செல்லக் கட்டாயப்படுத்துகிறார்.

படகு நடுக்கடலில் இருக்கும்போது, எதிர்காற்று அடித்து சீடர்கள் தண்டுவலிக்கப் பெரிதும் சிரமப்படுவதை காண்கிறார்.



பல மணிநேரமாக சீடர்கள் அல்லலுறுவதைக் கண்ட இயேசு, கடல் மீது நடந்து படகை நோக்கிச் சென்று, பின்னர் அதனைக் கடந்து செல்ல விரும்புகிறார்.

ஆனால் அவரை இனங்காண முடியாத சீடர்கள் “அது பேய்” என்று எண்ணினர். ஏற்கனவே இருந்த பீதியுடன், மேலும் அஞ்சிக் கலங்கினர்.

இயேசு அவர்களிடம், **“துணிவோடிருங்கள் நான்தான் அஞ்சாதீர்கள்”** என்றார். காற்று அடங்கியது. சீடர்கள் மிக மலைத்துப் போனார்கள்.

## இந்நிகழ்வில் நாம் கவனிக்கவேண்டியவை

- சீடர்கள் ஆண்டவர் செய்த வல்ல செயல்களை மறந்த நிலையில் இருந்தனர். சிறிது முன்னரே இயேசு 5000 பேரைப் போசித்திருந்தார்.
- அவர்களின் பற்றுறுதி (விசுவாசம்) சோதிக்கபடுகிறது.
- ஆண்டவரின் வல்லமையை திரும்பவும் உணர சீடர்களுக்குவாய்ப்பளிக்கப்பட்டது.

## ஆண்டவரின் செயல்களும் அவற்றின் முக்கியத்துவமும்

- ஆண்டவர் தமது சீடரின் பாதுகாவலைப் பற்றி கரிசனை உள்ளவராக அவர்களை அவதானித்துக் கொண்டிருக்கிறார்.
- ஆண்டவர் இயேசு இயற்கையின் ஆண்டவர் என்பதால், நீரின்மேல் நடந்து செல்கிறார். இயற்கை அவருக்கு கட்டுப்பட்டது என்பது தெளிவாகிறது.
- எதிர்காற்றினால் தத்தளித்துக்கொண்டிருந்த சீடர்களைத் தேற்றும் வண்ணம், அவர்களோடு படகில் சேர்ந்து கொள்கிறார். காற்று அடங்குகிறது,

## நாம் கற்பவை

- கடவுள் காலங்களுக்கூடாக தம் மக்களில் கரிசனையுடையவராயிருக்கிறார்.
- மக்களுக்கேற்படும் இடையூறுகளின் மத்தியில் அவர் பிரசன்னமாயிருந்து வழிநடத்துகிறார். ஆபத்துக்களின் மத்தியில் துணைவருகிறார்.
- நாம் எதிர்பாராத முறையில், எதிர்பாராத வழியில் தமது விருப்பிற்கிணங்க இதைச் செய்கிறார்.
- அவர் நம்மைப் பெலப்படுத்தி தமது பாதையிலும், பணியிலும் முன் நடத்திச் செல்லவல்லவராயிருக்கிறார்.
- எனவே நாம் அவரில் ஆழ்ந்த நம்பிக்கை வைக்கவேண்டும். அப்போது அவர் நம்மை பெலப்படுத்தி, சோதனைகளில் வெற்றிகொள்ளச் செய்கிறார்.

## சிந்திக்கவும்

- நாம் ஆண்டவரின் நற்செயல்களை மறந்த வேளைகள் உண்டா?
- நாம் ஆண்டவரால் பெலப்படுத்தப்பட்ட வேளைகள் யாவை?
- எப்போது நாம் ஆண்டவரை அதிகமாகத் தேடுகிறோம்?
- எப்போது நாம் ஆண்டவரைத் தேடவேண்டும்?

இலவச விநியோகத்திற்காக

## செயற்பாடு

1. இயேசு நம்மோடு கூடயிருந்து துணை வருவதற்காகவும், குறிப்பாக இக்கட்டுக்களின் மத்தியில் நமக்குத் துணையாக இருந்து, தேற்றிப் பெலப்படுத்துவதற்காகவும், நன்றி கூறி செபம் செய்யுங்கள்.

2. இயேசு, சீடர்கள் செல்லும் படகை மலைக்குன்றிலிருந்து அவதானித்துக் கொண்டிருப்பதை படமாக வரைக.

3. இயேசு கடல் மீது நடந்து கடலையும் சீடரையும் அமைதியுறச் செய்தார், இந்நிகழ்வை கவிதை வடிவில் தருக.